**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்றிட்டம் (ஜீஎவ்ஏரிஎம் செயற்திட்டம்) - 2018**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்றிட்டத்தின் (ஜீஎவ்ஏரிஎம் செயற்திட்டம்) காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா வினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 பெப்ரவரி 29 ஆம் திகதியிடப்பட்ட 857-எல்கேஏ-டீ-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதாரம் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்றிட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்கான நிறுவனம் ஆகும். இலங்கையில் காச நோய் கட்டுப்பாட்டு நிகழ்சித்திட்டத்தை வலுப்படுத்துவதே செயற்றிட்டத்தின் குறிக்கோள் ஆகும். செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் காச நோய் கூறுகளின் அதாவது காசநோய் புதிய நிதியிடல் மாதிரியின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1033.99 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 7.91 மில்லியனாக இருந்ததுடன் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செயவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட , குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 371(5) ஆம் இலக்க நிதிப்பிரமாணம் மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதியிடப்பட்ட 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | ரூபா 100,000 அதி கூடிய எல்லையை விஞ்சி ரூபா 242.86 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியானது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. | பொருந்தக் கூடிய விதிகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையுடன் இணங்காமை | கருத்து தெரிவிக்கவில்லை | உச்ச எல்லையை விஞ்சிய முற்பணம் வழங்குவதற்கு திறைசேரியிடம் இருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | செயல் நிமித்த உப கட்டுநிதிகள் உத்தேசித்த நோக்கத்திற்கு முன்னரான திகதியில் உடனடியாக வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 78 சந்தர்ப்பங்களில் ரூபா 1.96 மில்லியன் கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகள் உரிய திகதிக்கு 02 முதல் 09 மாதங்களுக்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. மேலும், 61 சந்தர்ப்பங்களில் ரூபா 1.75 மில்லியன் கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் உத்தேசித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 01 | பொருந்தக் கூடிய விதிகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையுடன் இணங்காமை | கருத்து தெரிவிக்கவில்லை | முற்பண கொடுப்பனவு குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்கு முன்னரான உடனடி திகதியில் வழங்கப்பட வேண்டியதுடன் தாமதங்களின்றி தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

முதல் 10 மாதங்கள் வரையான தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. பௌதீக செயலாற்றல்

## 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| புதிய நிதியிடல் மாதிரிக்கான காச நோய் கட்டுப்பாட்டின் செயன்முன்னேற்றம் நாளதுவரையாக்கப்படல் மற்றும் பணவளிப்பு வேண்டுதல் என்பவற்றின் பிரகாரம், செயற்திட்ட பிரகாரம், செயற்திட்ட காலப்பகுதியின் போது 11 பாதீட்டு கிரய வைக்கப்படுத்தல் களினூடாக 461 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் செய்லபடுத்துவதற்கு பட்டியல் படுத்தப்பட்டிருந்தன. ரூபா 38.55 மில்லயனுக்கு சமமான ஐ.அ.டொலர் 237,192 ஒதுக்கீடு 26 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப் பட்டிருந்ததுன் அதில் ரூபா 9.67 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 59,467 மாத்திரம் மீய்வாண்டின் இறுதியில் பயன்டுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஏனைய 08 பாதீட்டு கிரய வகைப்படுத்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 38.24 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 235,261 ஒதுக்கீட்டினை விஞ்சியதாக ரூபா 98.94 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 608,691 செயற்திட்டம் செலவு செய்திருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் ஒதுக்கீடுகளை சரியான நேரத்தில் பயன்படுத்துவதற்குமான இடர். | கருத்து தெரிவிக்கவில்லை | உத்தேசித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பெறப்பட்ட அனைத்து நிதிகளையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 குறை பயன்பாட்டுடைய வளங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்ட காலப்பகுதியின் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,033.99 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.91 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 917.10 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 6.26 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 34.13 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 210,086 மீளாய்வாண்டின் இறுதியில் நிதி அமைச்சிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. | உத்தேசித்த பணிகளை நிறைவேற்றுவதற்கான இடர். | கருத்து தெரிவிக்கவில்லை. | நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பெறப்பட்ட அனைத்து நிதிகளையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2008 ஆம் ஆண்டு முதல் ரூபா 522.84 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 2.88 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தை பெறுகை செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மீதான கட்டுபாடு பலவீனமடையும். | கருத்து தெரிவிக்கவில்லை. | பௌதீக மெய்மையாய்வினை பூர்த்தி செய்வதற்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சுகாதார, போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் கணக்காய்வு விடயத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எயிட்ஸ், காச நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய்க்கான புதிய நிதியிடல் மாதிரி கூறின் நிதிக்கூற்றுக்கள் மீது பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் தனியான கணக்காய்வு அறிக்கையொன்று சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மீது திருத்தப்படாத கணக்காய்வு அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது எவ்வாறாயினும், அதன் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்பு கோரப்பட்டிருக்கவில்லை. | -- | கருத்து தெரிவிக்கவில்லை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| வரிசை அமைச்சினால் நோயாளிகளின் பதிவுகளை பேணும் பொறிமுறையின் பற்றாக்குறை மற்றும் நோய்களின் தன்மையை வெளிப்படுத்துவதற்கான நோயாளிகளின் தயக்கம் போன்ற நோயாளிகளின் தயக்கம் போன்ற காரணங்கள் காரணமாக காச நோயாளர்கள் மற்றும் அதன் மீது ஏற்பட்ட இறப்புக்கள் முதலியன தொடர்பான தகவல்கள் வரிசை அமைச்சில் உடனடியாக கிடைக்கப்பெறவில்லை என்று கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | செயல்திட்டத்தின் செயற்பாடுகளின் விளைதிறனை மதிப்பீடு செய்ய இயலாமை. | கருத்து தெரிவிக்கவில்லை. | காச நோயாளர்கள் மற்றும் அதன் மேல் ஏற்பட்ட இறப்புக்கள் தொடர்பான பதிவுகளை பேணுவதற்கும் பொறிமுறையொன்றினை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |